ஸ்ரீ ராமஜெயம்

# ஓர் விக்ஞாபனம்

பூலோக வைகுண்டமான ஸ்ரீரங்கத்தில் நமது சமுதாயத்தினர்கள் தங்களது பித்ருக்களுக்கு ஸ்ரத்தையுடன் செய்யப்பட வேண்டிய நிர்ணயிக்கப்பட்ட அந்திமஸம்ஸ்காரங்களையும்: வருடாந்திர ஸ்ரார்த்த காரியங்களையும் செய்ய வசதி செய்து தரும் நோக்கத்துடன் ஸ்ரீ திருமங்கை மன்னன் சாரிடபிள் டிரஸ்ட் ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது திரு.டி.ஏ.ஸ்ரீனிவாஸன் அவர்களின் திருக்குமார். எஸ்.ஸம்பத் அவர்களை நிரந்தர ஸ்தாபகாராகக் கொண்டும்: இந்த புனிதத் தொண்டில் மற்றவர்களுக்கு உதவும் நோக்குடன் தன்னை பல ஆண்டுகள் ஈடுபடுத்திக் கொண்டு அனைவராலும் அன்புடன் கே.வி.மாமா என அழைக்கப்படும் திரு.கே.வி.ஸ்ரீனிவாஸன் அவர்களை தலைவராகக் கொண்டும் இவ்விருவருடன் இந்த செயல்பாடுகளில் தங்களை முழுமனதுடன் ஈடுபடுத்திக்கொள்ள விருப்பமுடைய சிலரை இதன் டிரஸ்டிகளாக கொண்டும் நிறுவப்பட்டுள்ளது.

தற்சமயம் வட திருக்காவிரி என அழைக்கப்படும் கொள்ளிடத்தின் தெற்கு கரையில் அந்திமகார்யங்களான சிதைக்கு அக்னி ஸமரப்பிப்பதிலிருந்து அன்றைய காரியங்கள் செய்வது வரை நடைபெறுகிறது. இந்த ஸம்ஸ்காரக்கரை மிகவும் ஸிதிலமடைந்து உடனடியாக (சீர் செய்ய) திருத்தியமைக்க வேண்டியுள்ளது. மேலும் பல சௌகரியங்களும் செய்யப்பட வேண்டியுள்ளது.

அந்திமஸம்ஸ்காரங்கள் தொடங்கி அதன் இறுதி காரியங்கள் வரை செய்யவும்: தர்மஸாஸ்த்திரப்படி ஸ்ரத்தையுடன் செய்யப்பட வேண்டிய ஸ்ரார்த்த காரியங்களையும்: போதுமான சௌகரியங்களுடன் தீர்த்தக்கரையில் செய்ய ஏற்பாடு செய்வது